

இராமநாதபுரம் மாவட்டம் கே.எம்.கோட்டை ஊராட்சியின் அ.தி.மு.க. கிளைக் கழகச் செயலாளர் உள்ளிட்ட அ.தி.மு.க. நிர்வாகிகளும் இராமநாதபுரம் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் முன்னிலையில் கமுதி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வி.வாசுதேவன் ஏற்பாட்டில் திராவிட முன்னேற்ற கழகத்தில் தங்களை இணைத்து கொண்டனர்.

### பொ,சிவபத்மநாதன் பங்கேற்பு! 100 க்கும் மேற்பட்டோர் பயன்பெற்றனர்! தென்காசி மாவட்டம்

# கல்லூரணி ஊராட்சி சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம்!

## தென்காசி மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

தென்காசி, ஜூலை 15 -

தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம் கல்லூரணி ஊராட்சியின் சார்பில் ஊராட்சி மன்றம் மற்றும் அகர்வால் கண் மருத்துவமனை இணைந்து மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் நிகழ்ச்சி பாவூர்சத்திரம் சமுதாய நலக்கூடத்தில் வைத்து நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் பங்கேற்று கண் சிகிச்சை முகாமை துவக்கி வைத்தார்.

இதில் 100 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கண் பரிசோதனை மேற்கொண்டு பயனடைந்துள்ளனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் பொ.சிவ பத்மநாதன்,தொழில் அதிபர் சேவியர் ராஜன்,ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார்,மாவட்ட கவுன்சிலர் சாக்ரடீஸ், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எல்லாம் குமார்,மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார், மாவட்ட பிரதிநிதி ஸ்டீபன் சத்யராஜ்,கழக வழக்கறிஞர் அரிகிருஷ்ணன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் செட்டியூர் ஹரி,ஒயிட் ராஜா, ஆல்வின் ராஜா,சுந்தர்ராஜ், குரு சிங், ஊராட்சி உறுப்பினர் பொட்டு தாய் தங்கப்பாண்டியன், அருள் ஜூல்லியஸ் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

இந்த முகாமில் அகர்வால் கண் மருத்துவமனை மருத்துவர்கள் பங்கேற்று 100 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு கண் பரிசோதனை செய்து உரிய அறிவுரைகளை வழங்கினார்கள்.

இந்த இலவச கண் மருத்துவ முகாம் கிராம மக்களிடையே பெரும் வரவேற்பு பெற்றுள்ளது,குறிப்பிடத்தக்கதாகும்.

### திருச்சி மலைக்கோட்டை தாயுமானவர் திருக்கோயிலுக்கு

# ‘லிப்ட்’ அமைக்கும் பணியை விரைவில் துவங்க வேண்டும்!

## முன்னாள் அமைச்சர் – மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தல்!



திருச்சி, ஜூலை 15-

மலைக் கோட்டை கோயிலுக்கு ‘லிப்ட்’ அமைக்கும் பணியை விரைவில் துவங்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தி உள்ளார்.

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி மாவட்ட கலெக்டரிடம் கோரிக்கை மனு வழங்கினார்.

அதில், திருச்சி மலைக் கோட்டை அருள்மிகு தாயுமானசாமி திருக்கோவிலுக்கு மின்தூக்கி (Lift) அமைக்க முன்னாள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, அன்றைய சட்ட மன்ற கூட்ட தொடரில் 2024-2025 வினாவில், முன்னாள் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் இத்திருக்கோயிலுக்கு மின்தூக்கி (Lift) அமைக்க, 08.01.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தொல்லியல் மற்றும் தொழில்நுட்ப விதிமுறைகளுக்கு உட்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தேவையான அனுமதிகளும் பெறப்பட்டுள்ளன. 17 மீட்டர் தொலைவில் உள்ள இடத்திலிருந்து. 149 மீட்டர் நீள இணைப்பு கோட்டைப் பகுதி வரை வசதியுடன் மின்தூக்கி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மலைக்கோட்டை திருக்கோவில், 273 அடி உயரமும் 417படிக்கட்டுகளும் கொண்ட, தொல்லியல் சின்னங்களுக்கு எந்த சேதமும் ஏற்படாத வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. திருச்சி மலைக்கோட்டை திருச்சி மாநகரின் அடையாளமாகவும் முக்கிய சுற்றுலாத்தலமாகவும் விளங்குகிறது. உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை தருகின்றனர். ஆனால், 417 படிக்கட்டுகளை ஏறுவது முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு மிகுந்த சிரமமாக உள்ளது. இந்நிலையில், ஒன்றிய அரசின் தொல்லியல் துறையிடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் (NOC) பெறப்பட்டு, ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணையை உடனடியாக அமல்படுத்தி, மின்தூக்கி அமைக்கும் பணிகளை விரைந்து தொடங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### சேலம் மாவட்டம், ஓதியத்தூரில்

# புரட்சியாளர் அம்பேத்கர் சிலையை உடனே திறந்திடுக!

## தமிழ்ப்புலிகள் கட்சித் தலைவர் நாகை திருவள்ளுவன் அறிக்கை!

கோவை, ஜூலை 15-

தமிழ்ப்புலிகள் கட்சித்தலைவர் நாகை திருவள்ளுவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், ஒதியத்தூரில் ஏற்கனவே புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் சிலை இருந்த இடத்தில் கம்பீரமான புதிய சிலையை நிறுவுவதற்கு கடந்த 2021 ஆம் ஆண்டு அப்பகுதி தலித் மக்கள் பணிகளை தொடங்கினர். நீண்ட காலதாமதத்திற்கு பிறகு பலகட்ட முயற்சிகளை மேற்கொண்டதின் காரணமாக கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் சிலையை திறக்க சேலம் மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் கடந்த ஜூலை 10ம் தேதி புதிய சிலையை திறப்பதற்கான நிகழ்வு நடைபெறவிருந்தது.

நாற்காலியில் கால்மேல் கால்போட்டு அமர்ந்திருக்கும் வடிவிலான புதிய சிலையை பொறுத்துக் கொள்ளமுடியாத சாதி வெறி வன்முறை கும்பலானது திட்டமிட்டு வன்முறையில் ஈடுபட்டது. இந்த வன்முறைச் சம்பவத்தில் காவல்துறை அதிகாரிகளும் 15க்கும் மேற்பட்ட பட்டியலின மக்களும் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் காவல்துறை வன்முறை கும்பலை கைது செய்வதை விடுத்து அப்பாவி தலித் மக்கள் மீது தடியடி நடத்தி அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. அதோடுமட்டுமல்லாமல் புரட்சியாளர் அம்பேத்கர் சிலையையும் தகரத்தால் மூடிவைத்துள்ளது.

கொள்கை தலைவர்களில் ஒருவராக உள்ள புரட்சியாளர் அம்பேத்கரை ஏற்றுக் கொண்டுள்ளதாக கூறும் தவெக அரசானது அவரது சிலையை சாதி வெறிக்கும்பலுக்கு அஞ்சி திறக்காமல் தகரத்தை வைத்து மறைத்து இருப்பது ஜனநாயக விரோதமானதும் கண்டணத்திற்குரியதானதாகும். சாதிவெறியோடு அம்பேத்கர் சிலையை திறக்க விடாமல் தடுக்கும் சாதிவெறிக்கும்பலையும் அதற்கு துணைபோகும் அரசு அதிகாரிகளையும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கைது செய்ய வேண்டுமென தமிழ்ப்புலிகள் கட்சி வலியுறுத்துகிறது.

இந்திய அரசியல் சாசனத்தை வரையறுத்து மானுட விடுதலைக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்து அனைத்து தரப்பு மக்களுக்கான உரிமைகளையும் சட்ட வடிவமாக மாற்றிக் கொடுத்த உலகம் போற்றும் தலைசிறந்த தலைவரான புரட்சியாளர் அம்பேத்கரை குறுகிய சிந்தனையுடன் அணுகுவது சாதிய மனநிலையேயாகும்.

இந்த சாதிய மனநிலைக்கு தமிழக அரசு அடிபணியாமல் ஒட்டுமொத்த இந்திய மக்களின் ஒப்பற்ற தலைவரான புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் கம்பீரமான சிலையை தக்க பாதுகாப்புடன் ஒதியத்தூரில் உடனே திறந்திட வேண்டும் என்று தமிழ்நாடு அரசை தமிழ்ப்புலிகள் கட்சி வலியுறுத்துகிறது.

இவ்வாறு நாகை திருவள்ளுவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தென்காசி சுரண்டையில் இலவச இயற்கை மருத்துவ முகாம்!

## தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் துவக்கி வைத்தார்!

தென்காசி, ஜூலை 15–

தென்காசி மாவட்டம் சுரண்டையில்,எஸ். தங்கப்பழம் இயற்கை மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி சார்பில் நடைபெற்ற மாபெரும் இலவச இயற்கை மற்றும் யோகா மருத்துவ முகாமை,தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் துவக்கி வைத்தார்.

சுரண்டை – பாவூர்சத்திரம் சாலையில், சுரண்டை நகராட்சி அலுவலகம் அருகிலுள்ள பிள்ளைமார் மண்டபத்தில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில், பொதுமக்களுக்கு இயற்கை மருத்துவ ஆலோசனைகள், உணவு முறை வழிகாட்டுதல், யோகா மற்றும் மூச்சுப் பயிற்சி, பிசியோதெரபி, அக்குபஞ்சர் சிகிச்சை உள்ளிட்ட சேவைகள் வழங்கப்பட்டன.மேலும், இரத்தப் பரிசோதனை,இரத்த அழுத்தம், உடல் எடை மற்றும் ஆக்சிஜன் அளவு உள்ளிட்ட பல்வேறு உடல்நலப் பரிசோதனைகளும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்வில் நகர துணைச் செயலாளர் பூல்பாண்டியன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவர் சங்கரநயினார், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் சபரி நிஷா, நகரப் பொறுப்புக்குழு உறுப்பினர் பிரம்மா மாரியப்பன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் முத்து சுப்பிரமணியன், ஜோதிடர் தங்க இசக்கி, வார்டு செயலாளர்கள் கண்ணன், டெய்லர் முருகன் உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### வரலாறு திரும்பும்!

# மக்களாட்சியின் மரபுகள் - மாண்புகள் மதிக்கப்பட வேண்டும்!



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்

ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து ஜனநாயகம் என்பது இருபுறம் கூர்தீட்டிய வாளாக சுழன்றுள்ளதை சரித்திரம் குறித்து வைத்துள்ளது. இந்திய ஒன்றிய நிலப்பரப்பு விடுதலைப் பெற்றபின்னர், ஆட்சி அரசியல் அதிகாரம் இவற்றை நிர்வகிக்கும் கட்டமைப்பை ஒழுங்குபடுத்துவதற்காக, இந்திய அரசியல் சட்டம் டாக்டர்.பாபாசாகிப் அம்பேத்காரால் உருவாக்கப்பட்டு 1949 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26 ஆம் நாள். விடுதலைப் பெற்ற இந்திய ஒன்றிய நிலப்பரப்பில் வாழும் மக்கள் தங்களுக்காகப் பிரகடனப்படுத்திய அரசியல் சட்டம் (CONSTITUTION OF INDIA) 1950 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 26 ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது.

இந்திய அரசியல் சட்டம் வரையறுத்திருக்கின்ற ஜனநாயக குடியரசு ஆட்சிக்கான நாடாளுமன்ற சட்டமன்றங்களுக்கான தேர்தல்கள் 1952 ஆம் ஆண்டு முதன்முதலாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மொழிவாரிமாநிலங்கள் பிரிக்கப்பட்டு, சென்னை மாகாணம் தமிழ்மொழியை தாய்மொழியாய்க் கொண்ட மக்களை உள்ளடக்கிய பகுதியே தனிமாநிலமாக அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஒன்றிய அரசின் சார்பாக எல்லா மாநிலங்களும் பயனடையத்தக்க வகையில், ஐந்தாண்டு திட்டங்கள் மூலமாக இந்திய ஒன்றியத்தின் வளர்ச்சிப் பணிகள் முடக்கிவிடப்பட்டு மாநிலங்கள் ஓரளவிற்கு வளர்ச்சியினை அடைய முடிந்தது. ஆனால், மாநிலங்கள் எல்லாத்துறைகளிலும் முழுமையான வளர்ச்சியினை எட்டிட இயலவில்லை.

**இத்தகைய சமூக அரசியல் பொருளாதாரச் சூழ்நிலையில்தான் 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சியமைத்தது. தமிழ்நாட்டின் முதல்வர் பொறுப்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறுகிய காலம் பொறுப்பிலிருந்தாலும் மூன்று வரலாற்று சிறப்புமிக்க தீர்மானங்களைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி தமிழ்மக்களின் ஒட்டுமொத்த வரவேற்பிற்கும், மகிழ்ச்சிக்கும் முழுமுதற்காரணமாக திகழ்ந்தார்கள்.**

பேரறிஞர் அண்ணாவைத் தொடர்ந்து, முத்தமிழறிஞர் கலைஞர், எம்.ஜி.ஆர்., ஜெ.ஜெயலலிதா, தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய திராவிட இயக்கத்தின் தலைவர்கள் பொறுப்பேற்று இன்றைய இந்தியத் துணைக் கண்டத்திலேயே நவீன வளர்ச்சிப் பெற்ற மாநிலமாக தமிழ்நாட்டை அனைத்து துறைகளிலும் உருவாக்கினார்கள்.

**குறிப்பாக, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய “திராவிட மாடல்” ஆட்சியில் “எல்லோருக்கும் எல்லாம்” என்ற அடிப்படைக் கோட்பாட்டை மையப்படுத்தி கல்வி, சுகாதாரம், பெண்ணுரிமை மீட்டுதல் மற்றும் பெண்கள் முன்னேற்றம் என்கின்ற புரட்சிகரமான சட்டங்களையும், திட்டங்களையும் தன்னுடைய ஆட்சிக்காலத்தில் உருவாக்கி இந்திய அரசியல் அரங்கத்தில் உயர்ந்து நின்றார் என்பது சமீபத்திய தமிழ்நாட்டின் வரலாற்று பதிவுகளாகும்.**

குறிப்பாகவும், ஆனால் சுருக்கமாகவும் குறிப்பிட வேண்டுமெனில், இன்றைய நவீன தமிழகத்தை உருவாக்கிக் காட்டிய சித்தாந்த பேரியக்கம் “திராவிட இயக்கம்தான்” என்பதையும், “திராவிட இயக்கத் தலைவர்கள்தான்” என்பதையும் வரலாற்றில் மறைக்கவோ, மறுக்கவோ எந்த சக்தியாலும், எந்த காலத்திலும் இயலாது என்பதை அறுதியிட்டு உறுதியாக இந்தக் கட்டுரையின் மூலம் பிரகடனம் செய்கிறேன்.

மக்களாட்சி முறையில் ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்ட அரசியல் கட்சிகள் தேர்தல்களை எதிர்கொள்வதும், வெற்றி தோல்விகளை சந்திப்பதும் இயல்பான ஜனநாயக நடைமுறையாகும். இதில் கலந்துகொண்ட அரசியல் கட்சிகளுக்கு வெற்றியோ தோல்வியோ நிரந்தரமானதல்ல, மாறாக ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பொதுத் தேர்தல்களில் மக்கள் கடந்தமுறை எடுத்த முடிவுகளுக்கு முற்றிலும் முரண்பட்டு புதிய முடிவுகளை மேற்கொள்ளலாம், அதன்மூலம் கடந்த தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் தோல்வி அடைவதும், தோல்வி அடைந்தவர்கள் வெற்றி பெறுவதும் இயல்பான ஜனநாயக நடைமுறையாகும்.

இதில், அரசியல் கட்சிகளில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் வாய்ப்பினைப் பெற்ற அரசியல் கட்சித்தலைவர்கள், பெரும்பான்மை மக்களின் முடிவுகளுக்கேற்ப தேர்தல் மூலம் வழங்கப்பட்ட அரசியல் அதிகாரத்தை மாநிலத்தின் முன்னேற்றத்திற்கும், அந்த மாநில வாழ்மக்களின் வளர்ச்சிக்கும் முழுமையாக பயன்படுத்திட வேண்டும்.

மேலும், தேர்தல்களத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அடுத்த பொதுத்தேர்தல் வருவதற்கு முன்னர் நிறைவேற்றுவதில் அக்கறையும் கவனமும் செலுத்த வேண்டும். இதுமட்டுமல்ல, எதிர்க்கட்சி என்பது ஆட்சியின் ஓர் அங்கம். அரசியல் அதிகாரத்தை செயல்படும் விதத்தில் உருவாகும் குறை நிறைகளையும், ஆளுங்கட்சியின் தவறுகளையும் சுட்டிக்காட்டும் கடமை எதிர்க்கட்சிகளுக்கு உண்டு என்பதை ஆளுகின்ற வாய்ப்பினைப் பெற்ற கட்சி தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

சட்டமன்றத்தில் எண்ணிக்கையின் பலத்தால் ஆளுகின்ற வாய்ப்பினைப் பெற்ற அந்த அரசியல் கட்சியின் தலைவர் எதிர்க்கட்சித் தலைவர்களின் விமர்சனங்களையும், கருத்துக்களையும் உன்னிப்பாக கேட்டு அவர்களின் கருத்துக்களில் உண்மை இருக்குமாயின் அதனை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தை பெற்றாக வேண்டும். சட்டமன்றத்தில் எண்ணிக்கையின் பலத்தைவிட எண்ணங்களின் பலம்தான் மதிக்கப்பட வேண்டும், ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுவார்.

எனவே, அந்த உயர்ந்த ஜனநாயகக் கோட்பாட்டை இன்றைய தமிழக வெற்றிக் கழகத்தினுடைய தலைவர் முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் பின்பற்றுகிறார்களா(?) என்பது ஒரு மிகப்பெரிய கேள்விக்குறியாக உருவாகியுள்ளது என்பதை இன்றைய முதல்வரின் சட்டமன்ற பொதுக்கூட்ட உரைகளும் நடவடிக்கைகளும் வெளிப்படுத்துகின்றன.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1962 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தன்னுடைய சொந்த தொகுதியான காஞ்சிபுரம் தொகுதியில் தோற்கடிக்கப்பட்டார். எதிர்பாராத காரணங்கள், சந்தர்ப்பச் சூழ்நிலைகள், ஜனநாயக விரோத சக்திகளின் ஆதிக்கம் ஆகியவை காரணமாகவும் நாடு போற்றும் மக்கள் என்ற நிகழ்வுகள் தலைவர்கள்கூட சிலநேரங்களில் தோல்வியை சந்திக்க நேரிடுகிறது என்பது வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, ஒரு தேர்தலில் ஒரு தலைவர் தோல்வி அடைந்தார் என்பதற்காக உயர்ந்த ஜனநாயகப் பண்பாட்டின் வழிகாட்டியாக இருக்க வேண்டிய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர், சட்டமன்றத்தில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை ஜனநாயக மரபுகளுக்கும், மாண்புகளுக்கும் முரண்பட்டு “எங்கே உங்க அப்பாவை காணோம்?” எனத் தனது இட்டுக்கட்டிய கதைமூலம், நகைப்பிற்குரிய உடல்மொழியால் முந்தைய முதல்வரைச் சுட்டிக்காட்ட முயன்றது, ஜனநாயக மரபுகளை அறிந்த மக்களால் சகித்துக் கொள்ள இயலாது.

இந்த உடல்மொழி நகைச்சுவை இத்தோடு முடியவில்லை. தமிழக முதல்வர் கரூர் பொதுக்கூட்டத்திலே உரை நிகழ்த்தும்போதுகூட, முந்தைய முதல்வர் அவர்களுடைய கொளத்தூர் தொகுதி தேர்தல் பற்றிய தோல்வி பற்றி குறிப்பிடும்பொழுது, “கொளத்தூர் தொகுதி மக்கள் கொத்து பரோட்டா போட்டுவிட்டார்கள்” என்று உடல்மொழிமூலம் “நையாண்டி” செய்வது ஒரு முதலமைச்சருக்கு அழகல்ல, என்பது ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட அனைவரின் உள்ளக் குமுறலாகும்.

முதலமைச்சரின் இத்தகைய பேச்சுக்களும், நடவடிக்கைகளும் அவரின் பொறுப்புக்கோ அல்லது அவர் வகிக்கும் முதலமைச்சர் பதவிக்கோ, அவர் ஆளும் தமிழ்நாட்டிற்கோ பெருமை சேர்க்காது என்பதில் அந்த அவையில் கடந்த காலத்தில் மக்களின் பிரதிநிதியாகவும், அமைச்சராகவும் இருந்தவர் என்ற அடிப்படையில் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்களின் சார்பாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இத்தகைய அநாகரிக அரசியல் நடவடிக்கைகளிலிருந்து முதல்வர் திருந்தினால் நல்லது. திருந்தாவிட்டால், தமிழ்நாட்டு மக்கள் திருத்துவதற்கு தீர்க்கமான முடிவெடுப்பார்கள். இதுதான் கடந்த காலங்களில் நடந்த வரலாறு. அது மீண்டும் திரும்பும்! (History Will Repeat). அப்பொழுது இன்றைய முதல்வர் ஜோசப் விஜய் எங்கே இருக்கிறார் என்று தேடவேண்டிய நிலையும் உருவாகலாம் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். இதுவே மக்களாட்சியின் மரபும் மாண்புகளும் ஆகும்.

ஆம்! ஜனநாயகம் என்பது இருபுறம் கூர்தீட்டிய வாள் தான்!!



விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம்,மீனாட்சிபுரம் கிராமத்தில் ரூ.16.45 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார்.நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர் தினகரன் ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து, ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர் பரமசிவ பாண்டியன், வடக்கு மாவட்ட கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆவுடையப்பன், வடக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சென்றாயப்பெருமாள், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.